# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.36/2024** **நாள் : 24.04.2024**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் (CMRL) மவுண்ட் பூந்தமல்லி சாலையில் (போரூர் சந்திப்பு) குடிநீர் பிரதான குழாய் மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் 25.04.2024 அன்று இரவு 9.00 மணி முதல் 27.04.2024 அன்று இரவு 9.00 மணி வரை (2 நாட்கள்) மண்டலம்–7, 8, 9, 10, 11, 12 மற்றும் 13 - க்குட்பட்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்.**

**<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் (CMRL) மவுண்ட் பூந்தமல்லி சாலையில் (போரூர் சந்திப்பு) குடிநீர் பிரதான குழாய் மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் **25.04.2024 அன்று இரவு 9.00 மணி முதல் 27.04.2024 அன்று இரவு 9.00 மணி வரை (2 நாட்கள்)** அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், ஆலந்தூர் மற்றும் அடையாறு ஆகிய மண்டலங்கள் மற்றும் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

| மண்டலம் | பகுதிகள் |
|---|---|
| மண்டலம் - 7<br>(அம்பத்தூர்) | அத்திப்பட்டு, பாடி, பார்க் ரோடு, டி.எஸ்.கிருஷ்ணா நகர், முகப்பேர் மேற்கு, முகப்பேர் கிழக்கு, |
| மண்டலம் - 8<br>(அண்ணா நகர்) | அரும்பாக்கம், அமைந்தகரை, சூளைமேடு |
| மண்டலம் - 9<br>(தேனாம்பேட்டை) | திருவல்லிக்கேணி, இராயப்பேட்டை, ஐஸ் ஹவுஸ், மைலாப்பூர் |
| மண்டலம் - 10<br>(கோடம்பாக்கம்) | கோயம்பேடு, விருகம்பாக்கம், சாலிகிராமம், வடபழனி, கே.கே.நகர், சைதாப்பேட்டை (பகுதி), நெசப்பாக்கம், ஜாபர்கான்பேட்டை, அசோக் நகர் |
| மண்டலம் - 11<br>(வளசரவாக்கம்) | அனைத்து பகுதிகள். |
| மண்டலம் - 12<br>(ஆலந்தூர்) | அனைத்து பகுதிகள். |
| மண்டலம் - 13<br>(அடையாறு) | ஆர்.ஏ.புரம், அடையாறு, வேளச்சேரி, தரமணி, திருவான்மியூர் |
| தாம்பரம் மாநகராட்சி | பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர் |

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in/ என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும். மேலும், கூடுதல் தகவல்களுக்கு 044-4567 4567 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள X CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in